[டாக்டர் எச். வி. ஹண்டே]

allowed it, what is the difficulty of the Hon. Minister, Mr. Adityan? All other Ministers have been answering similar notices, but why should Mr. Adityan alone be refusing to answer? That is the problem raised by the hon. Member Thiru Edmund, Sir.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுக்கும் பொழுது மாண்புமிகு அமைச்சருக்கு தெரிவிக்கப் படுகிறது. அமைச்சரின் அறிக்கை அலுவலகத்திற்கு வந்த பிறகு இந்த அவைக்குக் கொண்டு வந்துவிடுகிறோம். சில நேரங்களிலே எத்தனையோ கவன ஈர்ப்புத் தீர்மானங்களுக்கு அறிக்கை தயாராகிக் கொண்டிருக்கும்பொழுது சபை முடியும் நிலைமை ஏற்படுமானால் அது உறுப்பினர்களுக்கு அனுப்பப்பட்டும் வந்திருக்கிறது. அது புதுமை இல்லை. அந்த அறிக்கையை தயாரிக்க கொஞ்சம் காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது. அதிலே கனம் உறுப்பினர் திரு. எட்மண்ட் சொன்னது போல், இதிலே ஒன்றும் காலவரையறை வைக்கப்படவில்லை. ஆகவே, அமைச்சரை நாங்களும் வற்புறுத்திதான் வருகிறோம். எவ்வளவு விரைவிலே கொடுக்க முடியுமோ அவ்வளவு விரைவாகக் கொடுக்க வேண்டு மென்று கேட்டுக் கொண்டிருக்கிறோம். சில நேரங்களிலே காலதாமதம் தவிர்க்க இயலாது.

திரு. கே. எ. வகாப்: பாயின்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பாயின்ட் ஆப் ஆர்டர் என்று சொல்லி அனுமதி மறுக்கப்பட்ட ஒத்தி வைப்புத் தீர்மானத்தை எழுப்புவது முறை இல்லை.

(ஆ) சைகோன் நாட்டிலே தெற்கு வியட்நாம் போர் காரணமாக தமிழ் நாட்டு வியாபாரிகளுக்கு ஏற்பட்டுள்ள அவதி குறித்து

திரு. கே. எ. வகாப்: நான்கு ஆயிரம் தமிழர்களின் உயிர் உடைமை என்ன ஆவது? அதிலே நமக்கு அக்கறை இல்லையா? இன்றையத் தினம் சைகோன் நாட்டிலே தெற்கு வியட்நாம் போரிலே சிக்கலிலே மாட்டிக் கொண்டிருக்கின்ற தமிழ் நாட்டிலேயிருந்து போன 3ஆயிரம், 4ஆயிரம் வியாபாரிகள் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அமெரிக்கா போன்ற நாடுகள் அக்கறை கொண்டு அவர்களை கப்பல் மூலமாகவும், விமானம் மூலமாகவும் வெளியேற்றிக் கொண்டிருக்கிறார்கள்.... (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பார்லிமெண்டிலே கேட்கப்பட வேண்டிய கேள்வி அது.

திரு. கே. எ. வகாப்: அதைப் பற்றி அவர்கள் அக்கறை இல்லாமல் இருந்தாலும் தமிழக அரசு அக்கறை எடுத்து, பல்லாயிரக்கணக்கான வியாபாரிகளின் உயிர் உடைமை சம்பந்தப்பட்ட இப்பிரச்சினையில்...... (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அனுமதி மறுக்கப்பட்ட பிறகு எழுந்து கொண்டு பேசுவது என்ன முறை? நம்முடைய அவையிலே நடந்துகொள்ள வேண்டிய சில முறைகள் இருக்கின்றன. அதற்கு மாறாக எழுந்து பேசினால் என்ன செய்ய முடியும்? உங்களுடைய பாராளுமன்ற உறுப்பினர்களை விட்டு பார்லிமெண்டிலே எழுப்பச் சொல்ல வேண்டும். அதை விட்டு விட்டு சட்ட மன்றத்திலே எழுப்பினால் என்ன ஆவது? அனுமதி மறுக்கப்பட்ட ஒன்றைப் பற்றி இங்கே எடுத்துச் சொல்லுவது முறையா?

(இ) அமைச்சர் மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் சொத்து விபரக் கணக்குக் குறித்து

திரு. க. உரொ. எட்மண்ட்: ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். இன்றைய தினம் பேரவையின் முன்னால் இங்கே சில தஸ்தாவேஜுகள் வைக்கப்பட்டிருக்கின்றன. அதிலே சில அமைச்சர்களுடைய சொத்து கணக்குகள் இந்த மன்றத்தின் முன்னால் வைக்கப்பட்டிருக்கின்றன. அதிலே நம்முடைய விவசாய அமைச்சர் மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தன் கணக்கு இங்கே கொடுக்கப்பட்டிருக்கிறது........ (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதிலே தவறு இருக்குமானால், தவறான தகவல் கொடுத்திருக்கிறார்கள் என்று சொல்லி இங்கே உரிமைப் பிரச்சினை கொண்டு வாருங்கள். இதெல்லாம் பாயின்ட் ஆப் ஆர்டரிலே வராது.

(3) உரிமைப் பிரச்சினை "மக்கள் குரல்" நாளேட்டில் தவறான செய்தி வெளியிடப்பட்டுள்ளது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, திருவாளர்கள் வீராசாமியும், தோப்பூர் திருவேங்கடமும் ''சென்னை 18–4–1975, வெளியூர் 19–4–1975 தேதியிட்ட '' மக்கள் குரல் '' நாளேட்டில் '' வீராணம் திட்டத்தில் ரூ. 3½ கோடி ஊழல்—சட்ட சபைக் கமிட்டி அம்பலப்படுத்தும் தகவல் '' என்ற தலைப்பிட்டு வெளியிடப்பட்டுள்ள தகவல், இப்பேரவையில் நேற்று அளிக்கப்பட்ட பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கையை ஆதாரமாகக் கொண்டுள்ளது. அந்தக் குழுவின் அறிக்கையில் நாளேட்டில் குறிப்பிட்டுள்ளது போல எந்தத் தகவலும் இல்லை. எனவே,